

திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் விமான நிலையத்திற்குச் செல்லும் பேருந்தில் பயணிகளுடன் திருச்சி விமான நிலையம் எதிர்புறத்தில் உள்ள வயர்லெஸ் ரோடு பேருந்து நிறுத்தத்தில் இருந்து பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 03/09/2024 அன்று காலை பயணம் செய்தார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், மணிவேல், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் ஆ.முத்துகிருஷ்ணன், துணை மேலாளர் புகழேந்தி ராஜ், துணை மேலாளர் சாமிநாதன், உதவி மேலாளர் ராஜேந்திரன் மற்றும் பயணிகள் உடன் இருந்தனர்.

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியச் செயல்பாடுகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு!

சென்னை, செப். 5 -
சென்னை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று (3.9.2024) மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுடன் மாசு கட்டுப்பாடு வாரிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது பல்வேறு ஆலோசனைகளை வாரிய அலுவலர்களுக்கு தெரிவித்தார்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அடிக்கடி ஆய்வு செய்து அதன் செயல்பாட்டு திறனை உறுதி செய்ய வேண்டும் எனவும், செயல்படாத நிலையங்கள் பற்றிய தகவல்களை அரசுக்கு உடனடியாக அனுப்பவும் அறிவுறுத்தினார்.

மேலும் டேங்கர் லாரிகளில் கழிவு நீரை உரிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்வதை உறுதிபடுத்தவும், அத்துமீறி செயல்படும் வாகனங்களை போக்குவரத்து துறையுடன் இணைந்து வாகன உரிமத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். மணலி, எண்ணூர் பகுதியில் உடனடியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், அமோனியா மற்றும் குளோரின் போன்ற ஆபத்தான ரசாயனங் களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், அவ்வாறான இரசாயனங்களைப் பயன்படுத்தும் வழிமுறைகள் தொழிற்சாலைகளில் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும் சாயத் தொழிற்சாலைகளை திறம்படக் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தினார். சாயத்தொழிற்சாலை மற்றும் தோல் தொழிற்சாலையில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் உப்புக் கலவை கழிவினை அப்புறப்படுத்த மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்படி நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கல் குவாரிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்க குழு அமைக்கவும். அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்குவாரிகளை முறையாக ஆய்வு செய்து கண்காணிக்குமாறும் மேலும் சாயமிடும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தென்னை நார் தொழிற்சாலைகளை கண்காணிக்க வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், சிவப்பு வகை தொழிற்சாலைகளை சீரான இடைவெளியில் கண்காணிக்க வேண்டும் என வலியுறுத்தினார். மாவட்ட அலுவலகங்களுக்கு அப்பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்களை நியமிக்க வேண்டும் எனவும் கூறினார்.

மேலும், இக்கூட்டத்தில் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள், பிளாஸ்டிக் மற்றும் மின் கழிவுகளை முறையாக மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களை அதிக எண்ணிக்கையில் அமைக்க ஊக்குவிக்குமாறு கேட்டு கொண்டார். பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையங்களைச் சுற்றி போதிய எண்ணிக்கையிலான மரங்கள் வளர்க்கப் பட் டுள்ளனவா என்பதை உறுதி செய்ய அமைச்சர் கோரினார்.

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை அங்கீகாரம் வழங்குவதைத் தவிர, பல்வேறு கழிவு மேலாண்மை நடைமுறைகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், பல்வேறு கழிவு மேலாண்மையின் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு இணையதளத்தில் தொழிற் சாலைகள் பதிவு செய்துள்ளனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

அமைச்சர் - தொழிற்சாலைகள் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியைப் பயன்படுத்தி பெருமளவில் மரங்களை வளர்க்க அறிவுறுத்த வேண்டும் எனக் கூறினார்.

இறுதியாக தமிழகத்தில் சுற்றுச்சூழல் மாசு மற்றும் அதன் விளைவுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டார். தொழிற்சாலைகளைக் கண்காணிப்பதுடன் இயற்கையைப் பாதுகாப்பதும் நம் கடமை என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், சுற்றுச்சூழல், வனம் மற்றும் கால நிலை மாற்ற துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.செந்தில்குமார், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் டாக்டர். எம். ஜெயந்தி, வாரிய உறுப்பினர் செயலர் ஆர். கண்ணன் மற்றும் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டன் சத்திரம் வடக்கு ஒட்டன் சத்திரம் தெற்கு, தொப்பம்பட்டி கிழக்கு, தொப்பம்பட்டி மேற்கு, கீரனூர் பழனி கிழக்கு ஒன்றியங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

## 2026 சட்டமன்றத் தேர்தலிலும் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராவது உறுதி!

## அமைச்சர் அர. சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம், செப்.5-
திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி ஒட்டன்சத்திரம் வடக்கு, ஒட்டன்சத்திரம்தெற்கு, தொப்பம்பட்டி கிழக்கு, தொப்பம்பட்டி மேற்கு கீரனூர் பழனி கிழக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர சக்கரபாணி பேசியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கும் அனைத்து திட்டங்களும் ஒட்டன்சத்திரம் தொகுதிக்கு அதிக அளவில் பெற்று தரப்பட்டுள்ளது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் திண்டுக்கல், பொள்ளாச்சி தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி உழைத்தவர்களுக்கு நன்றி, தமிழகத்திற்கு 75,000 புதிய பேருந்துகள் வாங்கப்பட உள்ளன.

இதில் ஒட்டன்சத்திரம் தொகுதியில் இயங்கும் நகர பேருந்துகள் அனைத்து மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கப்படும். வருகின்ற செப். 17ம் தேதி சென்னையில் நடைபெறும் 75வது பவள விழா மாநாட்டிற்கு திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும். நிர்வாகிகள்அனைவரும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபட வேண்டும்,மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்கள் அனைவருக்கும் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் 75,000 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்,தகுதியின் அடிப்படையில் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கப்படும், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்காக பயனாளிகள் கட்டுமான பொருட்களை உற்பத்தி விலைக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2.5 லட்சம் வீடுகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு அளித்துள்ள தலைவர் கலைஞருக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் முயற்சியால் ஒன்றிய அரசு 100 ரூபாய் நாணயம் வெளியிட்டு கலைஞருக்கு பெருமை சேர்த்துள்ளது. வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற்று தளபதி மீண்டும் முதலமைச்சராக அரியணை ஏறுவார் என்று பேசினார் .



நிகழ்வில் மாவட்ட அவைதலைவர் மோகன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதிஸ்வரன், தர்மராஜன், சுப்பிரமணி தங்கராஜ், சாமிநாதன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் பொன்ராஜ், ஒன்றிய பெருந்தலைவர்கள் சத்ய புவனா, அய்யம்மாள், துணைப் பெருந்தலைவர்கள் காயத்ரிதேவி, தங்கம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மலர்விழிச் செல்வி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலு, செல்வராஜ், அவை தலைவர்கள், செல்வராஜ், செல்லமுத்து, ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், சிவபாக்கியம் ராமசாமி, ராமகிருஷ்ணன், ராஜ்குமார், பொருளாளர் அழகியணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேட், மாவட்ட பிரதிநிதி சத்யன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி, முருகானந்தம், தண்டபாணி, மாவட்ட மாணவரணி

துணை அமைப்பாளர் சுரேஷ்குமார் உள்ளிட்டமாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.படம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார்.

## உத்திரமேரூரில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கல்!

காஞ்சிபுரம், செப். 5 -
காஞ்சிபுரம் மாவட்டம் உத்திர மேரூர் தொகுதியில் 73 ஊராட்சிகளில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்படி 600 பயனனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. ஆகியோர் வழங்கினர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 73 ஊராட்சிகளில் குடிசை வீடுகளில் வாழ்ந்து வரும் ஏழை எளிய கிராம மக்களுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் 600 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி உத்திரமேரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஞானசேகரன், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் வான்மதி அனைவரையும் வரவேற்றார்.

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளரும் உத்திர மேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க. செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு 600 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இறுதியாக வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன் நன்றி கூறினார்.

### புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கம்

இதனைத் தொடர்ந்து உத்திர மேரூர் அடுத்த திருப்பிலிவனம் கிராமத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கும் கிராமப்புற மாணவ மாணவிகள் கல்லூரிக்கு வந்து செல்ல செங்கல்பட்டில் இருந்து சாலவாக்கம் வழியாக திருப்புலிவனம் வரை அரசு பேருந்து போக்குவரத்து தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் எம்பி ஜி. செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.

மேலும் கல்லூரி வளாகத்தில் 10 லட்சம் மதிப்பில் கலைஞர் நூற்றாண்டு முகப்பு வளைவு திறக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சித் தலைவர் சசிகுமார், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், அவைத் தலைவர் சுப்பராயன், கவுன்சிலர்கள் ருத்ர கோட்டி, சுகுணா சுந்தர்ராஜன், வீரம்மாள் மாயகிருஷ்ணன், நதியா கோபி, ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில்

# பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் திட்டப் பணிகள்!

## சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் எஸ். காந்திராஜன் தலைமையில் குழு உறுப்பினர்கள் நேரில் ஆய்வு!

தென்காசி,செப்.5-
தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் திட்ட பணிகளை சட்டபேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் எஸ்.காந்திராஜன்(வேடசந்தூர்) தலைமையில் குழு உறுப்பினர்கள் அம்பேத்குமார் (வந்தவாசி) கருமாணிக்கம்(திருவாடானை) சதன் திருமலை குமார்(வாசுதேவநல்லூர்) மா.சின்னத்துரை(கந்தர்வகோட்டை) ராமச்சந்திரன்(சேலூர்) பன்னீர்செல்வம்(சீர்காழி) பாலாஜி (திருப்போரூர்)ஓ.எஸ்.மணியன் (வேதாரண்யம்)சு.ராஜா (சங்கரன்கோயில்) வெங்கடேஸ்வரன் (தர்மபுரி) மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வை விட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் சட்டபேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் எஸ்.காந்திராஜன் (வேடசந்தூர்) தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலையில் நடை பெற்றது.

அதன் பின்னர் சட்ட பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் வேளாண் மற்றும் உழவர் நலன்,கால்நடை பராமரிப்பு,பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், கூட்டுறவு, நெடுஞ்சாலைகள், சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்,இந்து சமய அறநிலையங்கள், வனம் இயற்கை வளங்கள் ஆகிய அரசுத்துறைகளின் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் திட்டத்தின் காலவரம்பு அதன் பயன் இத்திட்டத்தின் செயல்முறை வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

மேலும் கூட்டுறவுத் துறையின் மூலம் 58 மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.4.48 கோடி மதிப்பிலான கடனுதவிகளையும்,12 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும்,204 பயனாளிகளுக்கு ரூ.2.02 கோடி மதிப்பிலான கடனுதவிகளையும்,1 பயனாளிக்கு ரூ.40 ஆயிரம் மதிப்பிலான கைம்பெண் கடனுதவியினையும், ஒரு பயனாளிக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணையினையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் மூலம் ரூ.2.20 கோடி மதிப்பில் 16 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் 14 பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை போன்ற நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் இரா.முருகன், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் வீ.ஆர். சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சி.கிருஷ்ண முரளி, முதன்மைச் செயலாளர் முனைவர் கீ. சீனி வாசன், கூடுதல் செயலாளர் பாலசுப்பிரமணியம், துணைச் செயலாளர் சு.பாலகிருஷ்ணன் வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா(தென்காசி) கவிதா (சங்கரன்கோவில்) நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி,ஒன்றிய குழு தலைவர்கள் பொன்.முத்தையா பாண்டியன்,லாலா சங்கர பாண்டியன்,நகராட்சி ஆணையாளர் கள் சபாநாயகம்,சுமா,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கந்தசாமி, கருப்பசாமி,மல்லிகா நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் காந்திராஜன் தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் மூலம் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையம் அமைக்கும் கட்டிட கட்டுமான பணியை நேரில் பார்வைக்கு ஆய்வு மேற்கொண்டார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி அருகே டி. பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 13.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடையை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், ஊராட்சி மன்ற தலைவர் அசுஃயா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் பண்ணைப்புரம் பேரூராட்சியில் ரூபாய் 19.89 கோடி மதிப்பீட்டில் கோம்பை, பண்ண புரம், தேவாரம் ஆகிய பேரூராட்சிகளுக்கு குடிநீர் குழாய் அமைக்க தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டை தொடங்கி வைத்தார். உடன் பேரூராட்சி தலைவர்கள் லட்சுமி, இளங்கோ, லட்சுமி, பால்பாண்டி, மோகன்ராஜ், உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் அணைப்பட்டி முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் குமரன், மாவட்ட பொருளாளர் பால்பாண்டி, பேரூர் செயலாளர்கள் இளங்கோ, முருகன், செயல் அலுவலர் பாலசுப்பிரமணியம், நிர்வாக பொறியாளர் ராமச்சந்திரன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.